
# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை



விலை 20 காசு



## தமிழக அரசியலில் பெரும் மாறுதலை ஏற்படுத்திய மாமேதை —ஏழைகளுக்காகப் பரிந்து வாதாடிய உத்தமர்!

# அண்ணாவின் நினைவு அழிவற்றது!

## நமது உள்ளங்களில் ஒளி விளக்காகத் திகழ்கிறார்

### நினைவு அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் மத்திய அமைச்சர் ஷேர் சிங் புகழாரம்

"புகழ் பெற்ற காலஞ்சென்ற தமிழ்நாட்டு முதலமைச்சரைக் கௌரவிக்கும் முறையில் ஒரு சிறப்பு அஞ்சல் தலையினை வெளியிடுவதற்காக மட்டும் அல்ல ...மக்களின் பேரன்புக்குப் பாத்திரமாகியிருந்த ஒருவருடைய நினைவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும் நாம் இங்கு கூடியிருக்கின்றோமென்பதிலும், அதற்கான இந்த விழாவில் பங்கு பெறுவதிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

"திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள், அறியப்படாத மனிதர் அல்லர். 'அண்ணா' எனப் பல இலட்சக்கணக்கான தமிழர்களால் பேரன்புடன் அழைக்கப்பட்ட அவர்–எந்தவிதமாகப் பார்த்தாலும்—சாதாரண மக்களின் செல்வக் குழந்தையாக விளங்கினார்.

"திரு. அண்ணாதுரையின் இன்முகமும் இங்கிதமும், பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட மக்களின் அன்பைக் கவர்ந்தன...என்று நான் உறுதியாகக் கூற இயலும்.

"ஆங்கிலத்திலும் தமிழிலும் அவரது சொற்பொழிவுத் திறனும், பத்திரிகைத் துறையில் அவருக்கு இருந்த ஈடுபாடும், மக்களிடையே அவர் புகழ் பெற்றமைக்கு ஒரு காரணமாகும்.

"ஒரு சொற்பொழிவாளர்—என்ற அளவில், அவருக்குச் சமமானவர்கள் வெகு சிலரே; பெருங் கூட்டங்களின் உணர்ச்சிகளை எழுப்புவதில் மட்டுமன்றி கிளர்ந்தெழுந்த கூட்டத்தினரை அமைதியுறச் செய்வதிலும் அவர் வல்லவராக இருந்தார்.

"ஏழைகளின் உண்மையான நண்பராக—அவர்களிலும் பரம ஏழைகளுக்காகப் பரிந்து வாதிடுபவராக அவர் விளங்கினார்; சாதாரண மனிதனின் நலனை தம் உள்ளத்தில் கொண்டிருந்தார்; இதற்கு அவரது 'ரூபாய்க்குப் படி அரிசித் திட்டம்' ஒரு சான்றாகும்.

"தமிழ் நாட்டின் அரசியல் வாழ்வில் பெரும் மாறுதலொன்று ஏற்படச் செய்த அவர், முதலமைச்சராக இரு ஆண்டுகளே இருந்தாரெனினும், இக்குறுகிய கால அளவிலேயே, 'திறமை மிக்க நிர்வாகி' எனவும், 'இராசதந்திரி' எனவும் பெயர் பெற்றார்.

"முதலமைச்சர் பதவியில் இருந்த இரண்டாண்டுகளில் அவரது செல்வாக்கினை எல்லோரும் உணரவும்—மதிக்கவும் செய்தார்; அவரது அடக்கம், எளிமை. நேர்மை—இவை யாவருடைய அன்பையும் பெருமதிப்பையும் அவருக்கு ஈட்டித் தந்தன!

"நாடாளு மன்ற மேலவை உறுப்பினர்—என்ற முறையில், தமது சிறந்த சொற்பொழிவுகளால்—கேட்டவர் உள்ளங்களை எல்லாம் அவர் எங்ஙனம் கொள்ளை கொண்டார் என்பதை நாம் இன்றும்கூட நினைவு கூர்கின்றோம்.

"அவரது அகால மரணத்தால், நாடு, திறமை மிக்க ஒரு நிர்வாகியை–யாவராலும் போற்றப்பட்ட ஒரு இராசதந்திரியை–இணையற்ற நேர்மை மிக்க ஒரு அரசியல் வாதியை இழந்துவிட்டது! நாடு நெடுகிலும் அவரது மரணம்; காரணமாகத் துக்கம் தெரிவிக்கப்பட்ட விதமே அவர் பெற்றிருந்த புகழுக்கு அழுத்தமான சான்று!

"பொதுவாக நாட்டிற்கும் — குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கும் அவரது மறைவு பேரிழப்பாகும்.

"சாதாரண மக்கள், அவருடைய அன்புள்ளத்தை இழந்து வருந்துகின்றனர்; தொழிலாளர்கள் உண்மையான நண்பர் ஒருவரை இழந்துள்ளனர்.

"அவரது நினைவு அழிவற்றது—நமது உள்ளங்களில் அது என்றும் ஒளி விளக்காக நிலைத்திருக்கும்!

"அவருடைய நினைவு நிலைபெறச்செய்ய அஞ்சல்–தந்தித்துறை, சிறப்பு நினைவு அஞ்சல் தலை ஒன்றை வெளியிட்டுள்ளது. திரு. அண்ணாதுரை அவர்கள் மக்களிடையே பெற்றிருந்த புகழைக் கருத்தில்கொண்டு வழக்கப்படியான அஞ்சல் தலைகளையும் முதல் தின உறைகளையும் பெரும் அளவுக்கு நாங்கள் அதிகமாக்கியுள்ளோம்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்குப் புகழஞ்சலி செலுத்துவதை எனக்குவாய்த்த ஒரு பெரும் பேறாகவே கருதுகின்றேன்.

—சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அண்ணா நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டுப் பேசுகையில்.

## அறிவிப்பு

பொங்கல் மலர் அலுவல்களை முன்னிட்டு கடந்த 4—1—70-ம் நாளைய இதழ் வெளிவரவில்லை என்பதையும் 11—1—70-ம் நாளைய இதழ், 25, 26, 27, 28, 29 ஆகிய எண்களுடன் பொங்கல் மலராக வெளி வந்துள்ளது என்பதையும் அதை அடுத்து 1—2—70 வரையில் அலுவலகத்துக்கு விடுமுறை ஆதலால் இதழ்கள் வெளிவரவில்லை என்பதையும் எல்லா விற்பனையாளர்களுக்கும், நூலகங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்,

உரிமையாளர்.


# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 8—2—70 | இதழ் 30


# தாளவாடித் தகராறு?

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற பூங்குன்றனரது பொன்னுரையைப் பரந்த உள்ளத்தோடு விரிந்த காரணத்துக்காகத் தம் பண்பாட்டோடு இணைத்துச் செயல்பட்டு வரும் தமிழர்களை, தமிழ் நாட்டைச் சுற்றியுள்ள சில பேர் ஏமாளிகள், ஏய்த்துப் பிழைக்கத் தக்கவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று எடுத்துக் காட்டுவதாகத்தா னிருக்கிறது—தாளவாடி பற்றிய தகராறு.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஹொசூர் தாலுகாவிலுள்ள தாளவாடி என்ற பகுதி, மாநிலப் பிரிவினையும், எல்லைகளும் வகுத்துக் கொடுத்ததன் பின் தமிழ் நாட்டோடுதான் இதுவரையிலும் இப்போதும் இருந்து வருகிறது என்பது மட்டுமல்லாமல், அங்குள்ள மக்களில் பெரும்பாலோர் மொழியால் கன்னடம் பேசினாலும், பண்பாட்டாலும், நாகரிகப் பழக்க வழக்கங்களினாலும் தமிழர்களாகவேதான் இருந்து வருகிறார்கள்.

ஆனால் மைசூர் மாநிலத்தைச் சார்ந்த ஒருவர், தான் ஏடுகள், இதழ்களது கவனத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடனோ என்னவோ, தாளவாடி பகுதி, கர்நாடகத்துக்குச் சொந்தமானது; 80 சத வீத மக்கள் கன்னடம் பேசுகிறார்கள். ஆகவே, கர்நாடகத்துடன் இணைத்துவிட வேண்டும் என்று பேசியது மட்டுமல்லாமல், கடந்த ஜனவரித் திங்கள் 28-ம் நாள் தாளவாடிக்குள் புகுந்து பஞ்சாயத்து அலுவலகத்தைக் கைப்பற்ற முனைந்ததுடன், அரசு ஊழியர்களையும் தங்கள் கடமையினைச் செய்ய முடியாதவாறு தடுத்துவிட்டிருக்கிறார்,

'யாரோ ஒருவர்' என்ற அளவில் இருந்தால்கூட பிரச்னை பெரிதாகி இராது; குறிப்பிடப்பட்டவர், கருநாடக மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர். மக்களின் பிரதிநிதி என்ற பட்டயத்தைத் தாங்கியிருக்கும் திரு. விட்டல் நாகராஜ ராவ், தான் மட்டுமல்லாது, சில தொண்டர்களையும் கூட்டிக்கொண்டு வந்து போராட்டம் என்பதன் பேரால், பூசலைக் கிளப்பிவிட்டிருக்கிறார்.

இந்த வன்முறை ஆக்கிரமிப்பு நடவடிக்கையைப் பார்த்துக்கொண்டு, தமிழக அரசு கையைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் துணிந்து கூறுவது மிகவும் வேடிக்கையாகவும், பரிதாபகரமாகவும் நமக்கு இருக்கிறது.

மைசூர் மாநிலத்தின் ஒரு பகுதியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் இதுபோல் நடந்துகொள்வார் என்று கற்பனையும் செய்ய முடியாது. இதைப் போலவே அந்த சட்ட மன்ற உறுப்பினரின் அடாவடித்தனத்துக்காக கைது செய்யப்பட்டதை எதிர்த்து, மாநிலத்தின் பல பகுதிகளிலும், தமிழர்கள் தாக்கப்பட்டும், தமிழர்களது வணிகக் களங்கள் சூறையாடப்பட்டும், தமிழ்த் திரைப்பட அரங்குகள் அலங்கோலப்படுத்தப்பட்டும், தமிழர் பயணம் செய்யும் சுற்றுலா வண்டிகள்கூட தீயிடப்படும் முயற்சியைத் தொடங்கியும் என்று பட்டியல் போட்டுக் காட்டி, வன்முறைகளைச் செய்யும் கீழ்மை, தமிழகத்துக்கு, என்றும் வராது,

அரசியல் பிரச்னைகளுக்காக, குடிமக்கள் தாக்கப்படுவதென்பது, மைசூர் மாநிலத்தில் அடிக்கடி நடைபெறும் சாதாரண சம்பவங்களாகி விட்டிருக்கிறது. எந்த ஒரு விவகாரம் என்றாலும், உடனே அங்கு பாதுகாப்பற்றிருக்கும் தமிழர்கள் தாக்கப்படுவதும், தமிழர் தம் கடைகள் சூறையாடப்படுவதும் வாடிக்கையாகவே இருக்கிறது.

மைசூர் மாநிலத்தைப் பொறுத்தமட்டில், அங்குள்ள மக்கள் அனைவரும், குறிப்பாகக் கன்னடியர்கள் தமிழினத்தின் உடன்பிறப்புக்களாகவே கருதப்பட்டு வருவது, தமிழ் நாட்டின் சிறப்புக்களில் ஒன்றாகும். ஆனால், அதே வேளையில், மைசூர் மாநிலத்தில்தான் தமிழர்கள் அடிக்கடி பாதுகாப்பற்றுப் போகிறார்கள் என்பதும் வரலாற்றேட்டில் பதிவாகிக் கொண்டே வருகிறது.

தாளவாடித் தகராறு, அரசியல் தலைவர்கள் மட்டத்திலும், அரசு மட்டத்திலும் தீர்த்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். இதில் தகராறுக்கே இடமில்லை என்று கூட அறுதியிட்டுச் சொல்லத்தக்க விவகாரம் இது. விவகாரமாக்க விரும்புபவர்கள், உரிய வழியில், உரிய முறையில் பிரச்னையைத் தொடுவதுதான் நாகரிக முறையாயிருக்குமே ஒழிய, வன்முறை ஆக்கிரமிப்பு போன்ற நடவடிக்கைகள், வருந்தத்தக்க விளைவுகளுக்குக் காரணமாகிவிடும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தாளவாடித் தகராறின் பின்னணியைத் தமிழ் நாடு எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டுவருவது மட்டுமல்லாமல், ஒசூர் பகுதியிலிருந்து, மைசூர் மாநிலத்துக்குச் சென்று மாநில முதல்வரைப் பேட்டி கண்டு, மனு ஒன்றும் கொடுத்து, இந்தப் பகுதியை, மைசூருடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளதாக வெளிவந்துள்ள செய்தியின் முழு வடிவத்

(15-ம் பக்கம் பார்க்க)




## [10]

வெற்றி ஊர்வலமும், விழாவும், கொண்டாட்டமும், களிப்புமாக, காஞ்சியிலும், தலைநகரிலும் குதூகலமாக இருந்தன. "கலிங்க மன்னன் கர்வப்பட்டுக் குதித்தான்; பிடரியில் கால்பட ஓடினான்' என்று கேலி செய்வோரும், 'சோழச் சூரர்கள் சூருவளிபோல் கிளம்பிய பின்னர்க் கலிங்கக்கூளம் நிற்குமோ?' என்று நையாண்டி செய்பவரும், தொண்டைமானின் தீரத்திற்குக் கலிங்கத்தார் துவளாது என் செய்வார்" என்று ஏளனம் செய்வோருமாக மக்கள் மகிழ்ந்தனர். மகனின் புகழ் கேட்டு முதுமையை மறந்து கூத்தாடும் தாயும், என் மகனின் நெஞ்சம் எஃகு; ஏறு போலும் நடையுடையான்' என்று பெருமையுடன் கூறிப் 'புலியின் வயிற்றிலே பூனையா பிறக்கும்?' என்றெண்ணிப் பூரிக்கும் தந்தையும், களத்திலே கீர்த்தி பெற்ற காதலனைக் கட்டித்தழுவி முத்தமிட உடலும் உள்ளமும் ஊறலெடுக்க, ஓடி ஆடி மகிழ்ந்திருந்த மங்கையரும், 'போர்முடிந்தது! பகைவன் தோற்றோடினான். வீரர்கள் வீடு திரும்புகின்றனர்!' என்று ஆனந்த கீதம் பாடியும், நடனமாடியும் கழித்தனர். "உன் அப்பா வருகிறாரடா குழந்தாய்! வந்ததும் கேள், 'என்னை விட்டு இத்தனை நாள் எங்கே போயிருந்தாய்?' என்று; பேசமாட்டேன் போ என்று சொல்லு என்று மகனுக்குத் தலைசீவிப் பூற்சூட்டிப் பொன்னணிபூட்டிப் பரிமள நீர் தெளித்து, முத்தமிட்டுக் கட்டித் தழுவிக் கொஞ்சினர் குமரிகள். "களத்திலே, இரத்தத்தைக் கண்டு, பிணத்தைத் துவைத்து, ஊண் உறக்கமிழந்தவர் வருகிறார், இனி அவருடைய மன மகிழ்ச்சிக்கு என்னென்ன செய்வது? ஆமாம்! அந்தப் பச்சை நிறச் சேலையைத்தான் அணிந்து கட்டிக்கொள்ளவேண்டும். அன்றோர் நாள் அதைக் கட்டிக்கொண்டிருக்கும்போதுதானே, சோலையிலே உலவும் கோலமயிலே! என்று என்னிடம் கொஞ்சி ...உம்! என்னென்னமோ செய்தார் இன்று அந்தச் சேலையைத்தான் அணிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் கதை சொல்லுவார் அவர். எவ்வளவு மெலிந்திருக்கிறாரோ? எத்தனை காயங்களோ உடலில்? என்ன நிலையோ? எப்போது வருவாரோ? என்னைக் கண்டதும் சிரித்துச் சல்லாபிப்பாரோ; அலுத்து மௌனமாவாரோ?" என்று ஏதோதோ எண்ணி ஏந்திழையார்கள் மேகத்தைக் கண்ட மயில் ஆடுவதுபோலக், கதிரோனைக் கண்டு மலரும் தாமரைபோல் ஆடை அணி புனைந்து, மாடங்களில் உலவினர்.

களத்திலே கணவர் இறந்த செய்தி கேட்டுச் சித்தம் சோர்ந்திருந்த சேயிழையார்கள், விழா நடப்பது கண்டு விம்மினர்; மறைந்த மணியை நினைத்து அழுதனர்; உண்ணவும் மனமின்றிச் சுருண்டு கிடந்

தினர் மனோஹரமான மாளிகை நெடுநாட்கள் பூட்டப்பட்டு, கலனுகிப், புழுதி படிந்து கிடக்கும் கோலம்போல, அம்மாதர், திலகமின்றித் திருவிழிகளில் ஒளியின்றி, மேனியில் பளபளப்பின்றி, ஆடை திருத்தமின்றி, சீவாது, சிரிக்கமுடியாது, சிவந்த கண்களுடன், சோக பிம்பங்களாகிக் கிடந்தனர். போர் என்ற சொல்லைக் கேட்டதும் புண்பட்ட மனம் கொப்பளித்தது "நாட்டின் நலன், மன்னனின் கீர்த்தி, இவைகளுக்காக என் வாழ்விலே இக்கதி! கூரான வாளோ, வேலோ அவர் மார்பிலே பாய்ந்த போது எப்படி அலறினரோ? எப்படி துடித்தாரோ? என்ன எண்ணி அழுதாரோ? என்ன கோரம்? எவ்வளவு கொடுமை? ஏன் சண்டை எனும் ஓர் சுழல், வாழ்க்கைப்பூங்காவைப்பாழாக்குகிறது? மலர் வனத்திலே ஏன் இக் கள்ளி?" என்று கூறிக் கதறினர். நிலவிலே கறைபோல் மகிழ்ச்சியிலே மூழ்கிய சோழ மண்டலத்திலே, இக்காட்சியும் இருக்கத்தான் செய்தது. போர், விளையாட்டா!


நடனராணியின் நிலையோ, விசித்திரமான வேதனை! காதலன் களத்திலே காட்டிய தீரத்தை, அவனது போர்த் திறன் கண்டு பகைவர்கள் மருண்டோடியதை, அவனது அஞ்சாத செயலைக் கூறிப் பின்னர், அத்தகைய வீரன் அயர்வறியாத வீரன், சோழ மண்டலச் சூரன், கடைசியில் கலிங்க நாட்டானிடம் கைக்கூலி பெற்றுன். மன்னனைக் காட்டிக் கொடுக்கத் துணிந்தான், துரோகியானுன், தொண்டைமான் அவனை நாட்டைவிட்டே துரத்திவிட்டார், என்று கூறக் கேட்ட நடனராணி, மூர்ச்சித்துக் கீழே சாய்ந்து, "என் காதலனு துரோகி! நன்னெறியன்றி வேறறியா வீரனு துரோகி! சோழநாட்டுக்காக தன் உயிரையும் தரும் தூய்மையான உள்ளம் படைத்த உத்தமனு துரோகி! நான் நம்பேன்! என் அருமைக் காதலனை நானறிவேன் நன்கு. அவருக்குக் குள்ளநரிச் செயல் தெரியாது. குலப் பெருமைக்கே குவலயத்தில் வாழ்கிறேம் என்றே கூறும் கண்ணியரல்லவோ! நாட்டைக் காட்டிக் கொடுக்கவா களம் புகுந்தார்! கடும்போர் புரிந்தார்! எதிரிகளை கண்ட துண்டமாக்கினர்! இல்லை! இல்லை! இதில் ஏதோ சூது இருக்கும்; என் சுந்தரரூபன்மீது யாரோ சதி செய்திருக்கின்றனர்" என்று அழுது கூறினள். அம்மங்கையோ திகைத்தாள்; தலை அசைத்தாள்; தேம்பும் நடனுவைக் கண்டாள்; என்ன செய்வதென்றறியாது விழித்தாள். நடனு அம்மங்கையின் அடியினைப் பற்றிக்கொண்டு, நீர் பெருகும் நேத்திரங்களால், அவளை நோக்கி, "தேவி! உமக்கே தெரியும், இந்த உயிரை நான் எவர் பொருட்டு வளர்த்து வருகிறேன் என்று அவரைப் பிரிந்து நான் வாழ்வேனு? அவர் மதிப்புக்கு பங்கம் வந்த பிறகு, எனக்குத் தங்கக்கோட்டை கிடைப்பினும் சகிப்பேனு? அவரையும் என்னையும் அரசனின் ஆக்கினை பிரிக்கிறது; மலரையும் மணத்தையும் வேருக்குவதோ? கண்ணிலிருந்து ஒளியை நீக்கிடுவதோ? என் மணுளரை இழந்திட நான் சம்மதியேன். அவர் ஒரு குற்றமும் செய்திருக்க முடியாது; செய்யும் வகையுமறியார். செந்தமிழ் நாட்டுச் சிங்கம் சூது வாது அறியாதார். அவரை மீட்டுத்தரவேண்டுகிறேன். என் உயிரை எனக்குத் தானம் தரக் கோருகிறேன். நாடெங்கும் விழா நடக்கிறது; வீதிகளிலே பூச்சூடி மங்களம் பாடிக் காதலரைத் தேடிக் காரிகையர் நடமாடுகின்றனர். பூங்காவிலே, மரநிழலிலே, களத்திலே தான் காட்டிய வீரத்தைக் கூறி, காதலியின் கன்னத்தைக் கீறி, நெஞ்சிலே காதல் ஊறிட உரையாடி, உல்லாசமாகப் பல்லாயிரவர் இருக்க, வீரத்திலே எவருக்கும் இளைக்காத என் வேந்தர், வேற்றூரிலோ, காட்டிலோ, மேட்டிலோ, கடும் குளிரிலோ, கடும் வெயிலிலோ, நாடோடியாகச் சுற்றவும் நான் இங்குக் கதறவுமான நிலை வரவா கலிங்கப்போர் மூண்டது! கலிங்கப் போர், வீரர் பலரின் உயிரைக் குடித்ததோடு திருப்தியடையக் கூடாதா! போரின் பசி தீரவில்லையா! என் மனதை புண்ணுக்கி, என்னைச் சித்திரவதை செய்யவும் வேண்டுமா! என்னைப் பாரும் அம்மையே! என் வாழ்வு என்ன கதியாவது! சோழ மண்டலத்திலிருந்து துரத்தப்பட்ட பிறகு, தமிழனை, மற்ற இரு மற வேந்தரும் மதிப்பரோ? இடந்தருவரோ? என் மன்னனின் வாழ்வு இதுபோலவா ஆகவேண்டும்?" என்று கூறுகிறுள்.

அம்மங்கை ஏதும் கூருதவளாய், அரசனைக் கண்டு பேசுவோம் என்று எண்ணிக்கொண்டு, நடனராணியைத் தேற்றும்படி தோழியருக்குக் கூறிவிட்டுத் தனது அந்தப்புரம் சென்று சோகத்துடன், தன் அறைக்குள் நுழைந்தாள். திடுக்கிட்டாள், ஏனெனில். அங்கு ஆரியமாது கங்காபாலா புன்னகையுடன் நிற்கக் கண்டாள். புருவத்தை நெறித்த

### முன்கதை

உறையூர் சோழ மன்னன் குலோத்துங்கனுடைய ஒரே புதல்வி அம்மங்கைத்தேவியின் தோழி நடன ராணியை மன்ன
ரின் அபிமானத்துக் குரிய படைவீரன் வீரமணி காதலிக்கிருன். இதனுல் நடன ராணிக்கு அரச குமாரியிடத்திலும் மதிப்பு அதிகரிக்
கிறது. இது இன்னெரு தோழியான கங்காபாலாவுக்கு எரிச்சலூட்டுகிறது. இருவரையும் பிரித்து, தானே முதலிடம் பெறமுடிவு
செய்து சதிச்செயல்களில் ஈடுபடுகிருள் கங்காபாலா. வீரமணி எதிரிநாட்டு ஒற்றன் என்றுகூட சொல்கிருள் இளவரசியிடம். எனினும்
அதை நம்பாமல், கங்காபாலாவைக் கடிந்துகொள்கிருள்!
கலிங்க மன்னன்மீது கப்பம் கட்டமறுத்துவிட்ட காரணத்தால், போர்ப் பிரகடனம் செய்யப்படுகிறது. உறையூர்விட்டு
கச்சி புறப்பட்ட மன்னர், உடன் சென்ற வீரமணியையும், படைத்தலைவனையும் போர் முகத்துக்கு அனுப்புகிருர்.
கலிங்கம் தோற்கிறது, ஆனுல் களத்திலே கண்ட கலிங்க வீரன் ஒருவனைக் காப்பாற்றும் முயற்சியிலே, வீரமணி துரோகி
யாக்கப்படுகிருன்.

படி "புன்னகைக்காரி! ஏது இங்கு வந்தது?" என்று பாலாவை அம்மங்கை கேட்டிட, கங்காபாலா, "தேவி! இன்றுவது உமது கண்கள் திறந்திருக்கும். கபட நாடகத்தைக் கண்டு கொண்டிருப்பீர்கள் என்றுதான் வந்தேன்" என்று கூறினாள். "கபடமும், நாடகமும்! மீண்டும்உளறல்" என்றாள் அம்மங்கை மஞ்சத்தின்மீது படுத்துக்கொண்டு. கங்காபாலா விசிறி கொண்டு, உபசாரத்துக்கு வீசிக் கொண்டே "என் கன்னத்தில் அறைந்தீரே! களத்திலே நடந்தது கேட்ட பிறகு தெரிந்ததா உண்மை? கபட வேடக்காரனின் கதை வெட்ட வெளிச்சமாகிவிட்டது பார்த்தீர்களா? ஊர் கொதிக்கிறது தாயே! கலிங்கனுக்கு நாட்டைக் காட்டிக்கொடுத்தவனைக் கழுகுக்கு இரையாக்க வேண்டியதை விட்டுக் கருணாகரர் சாதாரணத் தண்டனை தந்தாரே என்று மக்கள் கோபிக்கின்றனர். அம்மே! அது மட்டுமல்ல! நடனாவின் மீதும் மக்களின் கோபம் திரும்பி இருக்கிறது. பாபம் அவள் சூதுவாதறியாத சுந்தரி! கொஞ்சம் பேராசை! சபலபுத்தி! அவனிடம் மயங்கினாள்; அவனை அவள் ஒரு சாதாரண போர் வீரன் என்றே நினைப்பதில்லை, புவியாளப் பிறந்தவன் என்றே கருதி வந்தாள். அவன் அப்படிச் செய்துவைத்தான்" என்று மெள்ள மெள்ள விஷ வாடையை வீசினாள்.



"மன்னன், என் வேந்தன், என்று நடனா அவனைக் கூறினாள். காதல் மயக்கமாகத்தான் இருக்குமென்று நினைத்தேன்." என்று அம்மங்கை கூறிட, அதுதான் சமயம் எனக்கண்டு, கங்காபாலா, "காதல் மயக்கமல்ல, கிரீடத்தின்மீது கொண்ட மோக மயக்கம் அம்மணி! வீரமணி வேந்தன், நடனராணி அவனுக்கு ராணி! இதுவே அவர்களின் அந்தரங்கத் திட்டம். அன்று குகையிலே நடந்த சதி, வெறும் பொக்கிஷத்துக்கு என்று எண்ணுகிறீர்கள்? தூ! வீரமணி பணத்துக்காகவல்ல அந்தப் பாதகம் செய்யத் துணிந்தது; முடிதரிக்கவே சதி செய்தான்" என்றாள் கங்காபாலா.

"போடி பொல்லாங்குக்காரி" என்று அம்மங்கை கங்காபாலாவைத் திட்டினாளேயொழிய மனதிலே, "இருக்குமோ! நடந்திருந்தால்தான் நாம் என்ன கண்டோம். வீரமணி மீது கருணாகரர் வீணாகவா தமது அதிகாரத்தைச் செலுத்தியிருப்பார். இருக்கும்; அரண்மனைகளிலே இது நடப்பதுதானே. வீரமணிக்கு இந்த விபரீதபுத்தி இருந்திருக்கக்கூடும். யார் கண்டார்கள்? பாம்பு என்ன பார்வைக்குக் கேவலமாகவா இருக்கிறது! சிறுத்தைதான் என்ன சிரித்துக்குலுக்கி நடக்கும் சிங்காரியின் மேலாடை போன்ற போர்வையில்தான் இருக்கிறது. வீரமணியின்வெளித்தோற்றந்தானே, நடனாவுக்குத்தெரியும். அவன் துரோகிதான். நாட்டுக்கு, நமக்கு, நடனாவுக்கு, தமிழகத்துக்கே துரோகிதான். சந்தேகமில்லை" என்று முடிவு செய்துகொண்டாள்.

ஒரு படி மேலேறிவிட்டோம் என்றுணர்ந்த கங்காபாலா, "தேவி! ஊரிலே கூடிக்கூடி பேசிக்கொள்கிறார்கள், அந்தத் துரோகியின் துணையாக இருந்து வந்தவளையும் நாட்டைவிட்டுத் துரத்த வேண்டுமென்று"என்று ஆரம்பித்தாள். அம்மங்கை சீறி எழுந்து "சீ! இதென்னடி கொடுமை! அவன் துரோகம் செய்தால், அவள் என்ன செய்வாள்?

(11-ம் பக்கம் பார்க்க)

# ?! வினா-விடை

**கே. முருகேசன், சென்னை,**

சோஷலிசமும், ஜனநாயகமும் ஒன்றாயிருக்க முடியாது என்று அண்மையில் ஆச்சாரிய கிருபளானி பேசியிருப்பதற்கு விளக்கம் என்ன?

மிகப் பெரியதொரு தத்துவ விளக்கம் தேவை இந்த வினாவுக்கு விடையளிக்க. தனியொரு நூலாக எழுதித்தான் விடையளிக்க முடியும். பிண்டமாக மட்டும் சொல்ல முனைகிறேன். சோஷலிசம் என்றால், எந்த ஒன்றின்மீது அது ஏற்றி வைத்துப் பேசப்படுகிறதோ அந்த ஒன்று அரசுக்குச் சொந்தமாகிறது என்பது மட்டுமல்ல; அந்த நாட்டின் மக்கள் அனைவருக்கும் சொந்தமாகிறது என்றும் பொருள்படும், ஒன்றை நாட்டுடைமையாக்குதல் என்பதற்கும், இந்த சோஷலிச முழக்கத்துக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது. சோஷலிசத்தின் பேரால் நாட்டுடைமையாக்கப்படும் ஒன்றில், நாட்டவர் அனைவருக்கும் பங்குண்டு என்று கூறப்படுகிறபோது, சில பேர் பாதிக்கப்படச் செய்கிறார்கள், சிலருக்கு மட்டுமே உரிமையுடையதாயிருக்கும் ஒன்று, பலருக்கும் உரிமையுடையதாக ஆக்கப்படும்போது, பாதிக்கப்படுபவர்கள், ஜனநாயகம் பேணிப் காக்கப்படவில்லை என்று கூறமுடியும். இந்த கூற்றில் உண்மையேதுமில்லை என்றும் கூறிவிட முடியாது. இங்குதான் ஜனநாயகத்துக்கே உரிய சிறுபான்மை, பெரும்பான்மை என்ற நடைமுறை செயல்படுகிறது. உண்மையாகவே தன் ஆற்றலைக் காட்டுகிறது. சிறுபான்மையினரின் ஜனநாயகம், பெரும்பான்மையினரின் ஜனநாயகம் என்று பிரிக்கப்பட்டு, பலருக்கும் நன்மையளிக்கும் வகையில், பெரும்பான்மை ஜனநாயகம் செயல்படுத்தப்படுகிறது. சிறுபான்மை அங்கே மதிப்பிழந்து போகிறது. ஜனநாயகம் என்ற சொல்லுக்கு எந்த நிலையிலிருந்து பொருள் விளக்கம் கொடுக்கப்படுகிறதோ, அதற்கேற்பவே. அது தன் ஆற்றலைப் புலப்படுத்தக்கூடிய விந்தை மிகுந்ததொரு தத்துவம் அது. ஜனநாயக உரிமைகளை, சிறுபான்மை, பெரும்பான்மை என்று பிரிக்கக் கூடாது என்பவர்களும் உண்டு. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடுகள் நிலவிக் கொண்டிருக்கிற காலம் மட்டும், ஜனநாயகக் கோட்பாடுகளிலிருந்து சிறுபான்மை, பெரும்பான்மைகளையும் பிரித்துவிட முடியாது. இந்த வேறுபாடுகளைக் காட்ட முனையக்கூடாது என்று விளக்கம் தருவதற்குக்கூட ஜனநாயகம் இடந்தர முடியும்! காட்ட வேண்டும் என்று உரத்து முழங்குவதற்கும் ஜனநாயகம் இடந் தரும்! அதனாலேயே அது ஜனநாயகம் என்றிருக்கிறது! அனைவருக்கும் நீதி! என்கிறபோது, அந்த அனைவரிலும், உயர்ந்தவர்களும், தாழ்ந்தவர்களும்—அதாவது பணக்காரனும் ஏழையும் இருக்கத்தானே செய்கிறான்? பணக்காரனிடம் இருக்கின்ற ஒன்றை எடுத்து, இல்லாதவனுக்குப் பங்கிடும்போது, "அனைவருக்கும் நீதி" என்கிற தத்துவம் பிழைபட்டுப் போகிறது. ஜனநாயகம், சரியாகப் பேணிக் காக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு அது உரியதாக ஆகிவிடுகிறது. மக்களுடைமை என்கிற முழக்கத்தில், மக்கள் என்கிற சொல்லில், பணக்காரர்களுக்கும் இடமுண்டென்றால், சோஷலிசமும், ஜன நாயமும் ஒன்றாக இருக்க முடியாதுதான்! சோஷலிச ஜனநாயகம் என்கிற முழக்கத்தில், சிறுபான்மை என்ற வேறுபாடுகளைக் கணிப்பது ஏற்கப்படும்போது, இவை ஒன்றாகஇருப்பதில் ஆபத்தேதுமிருக்க முடியாது. அதாவது பத்துப் பணக்காரர்கள் சிறுபான்மையினர். இவர்கள் தொண்ணூறு இல்லாத மக்களது வாழ்வை வதைத்துக் கொண்டிருப்பதைத் தடுத்து, இல்லாதவர்களுக்கு, இருப்பவர்களிடமிருந்து எடுத்துக் கொடுப்பதை, பெரும்பான்மை ஜனநாயகமாக்கிவிட முடியும்! சிறுபான்மையினரின் உரிமை, மற்ற தொண்ணூறு பேரின் உரிமைக்கும் சமமாக்கப்பட்டுவிட வேண்டும். இதில் முரண்பட வழியில்லை. இவை அனைத்துமே, தரப்படுகின்ற விளக்கத்தையொட்டி பொருள் கொடுப்பனவாகும். எப்படியும் விளக்கந்தர இடங்கொடுப்பதுதான் ஜனநாயகமென்பதை முன்பே சொல்லி இருக்கிறேன். புரிந்த வரையில் விளங்கிக் கொண்டால் சரி!

**ஆர். மாணிக்கவாசகம், மன்னார்குடி.**

ரஷ்ய நாட்டு ரஸ்புடீனுக்கு உவமை காட்டக்கூடியவர்கள் இந்தியாவிலிருக்கிறார்களா?

இந்தியாவிலென்ன ஜார் ஆட்சியா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? காமராசர், மொரார்ஜிதேசாய் ஆகியோரது அரசியல் வாழ்வு, முற்றுப் பெற்றுவிட்டது ஐயா!

**ஆற்றலரசு, ஈரோடு.**

கவிஞர்கள் எப்படிப் பட்டவர்களாய் இருக்கவேண்டும்?

கவிதையினை, கவிதைகளாய் எழுதுவதற்குத் தெரிந்தவர்களாக மட்டுமல்ல—காலத்தையும், அதன் நிகழ்ச்சிகளையும் கவிதையில் செதுக்கித் தருகின்ற சிற்பிகளாயிருக்க வேண்டும்!

**எம். ஜி. ஆர். தாசன், சென்னை.**

ஆரியம் புத்துயிர் பெறமுடியும் என்று நம்பலாமா?

புத்துயிர் பெறவிடக்கூடாது என்று நினைக்கலாம், அறிஞர் அண்ணா அவர்கள் 'ஆரியம்' என்பதற்குக் கூறியுள்ள பொருளில்!

★

# அரைக் கம்பத்தில் கொடி!

# அடி வயிற்றில் இடி!

— கடலூர் இராமையன் —

1949 செப்டம்பர் 17-ம் நாள்— கொட்டும் மழையில் கொள்கை விளக்கத்துடன்,

அண்ணனே!

அன்புருவே! அரிமாவே!

தங்களின் திருக்கரத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டீர்கள்.

நாங்களும் எங்கள் இதயங்களிலே அந்த இலட்சியக்கொடியை ஏற்றிப் பறக்கவிட்டோம்!

இதயத்திலே ஏற்றியது போதாது என்றீர்கள்!

எங்கள் இல்லங்களிலே ஏற்றிப் பறக்கவிட்டோம்!

இல்லங்களில் ஏற்றியதுபோதாது —தெருக்களிலே ஏற்றுங்கள் என்றீர்கள்.

தெருவெங்கும் ஏற்றிப் பறக்கவிட்டோம்! ஊரெங்கும் ஏற்றிப் பறக்கவிட்டோம்!

படித்தவர்கள் நிரம்பிய நகரங்களில் மட்டும்தானே! உங்கள் கொடி பறக்கிறது. எங்கே கிராமங்களில் காட்டுங்கள் என்று காங்கிரசார் கேலி செய்வது 'ஏடா தம்பி உன் காதில் விழவில்லையா?' என்றீர்கள்.

நகரங்களில் மட்டுமின்றி—பட்டி தொட்டிகளில் எல்லாம் எங்கள் இதயக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டு எதிரிகளின் ஏளனப் புன்னகைக்குப் பொருளில்லாமல் ஆக்கி வைத்தோம்.

அண்ணா!

வட்ட மாநாடு என்றீர்கள்—

வட்டம் தோறும் கொடிகளை ஏற்றிப் பறக்கவிட்டோம்!

மாவட்ட மாநாடு என்றீர்கள்—

மாவட்டமெங்கும் கொடிகளை ஏற்றிப் பறக்கவிட்டோம்!

மாநில மாநாடு என்றீர்கள்—

மாநிலமெங்கும் கொடிகளை ஏற்றிப் பறக்கவிட்டோம்!

இந்த மாநிலத்தில் மட்டும்தானா? என்று மாற்றார் பரிகசித்துப் பேசி அதன் மூலம் தங்களின் தலை தாழ்ந்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தில்;

கேரளத்தில் ஏற்றிப் பறக்கவிட்டோம்!

கன்னடத்தில் ஏற்றிப் பறக்கவிட்டோம்!

ஆந்திரத்தில் ஏற்றிப் பறக்கவிட்டோம்!

தமிழகத்தை ஒட்டிய மாநிலங்களில் மட்டும்தானா? என்றீர்கள்.

பம்பாயில் பறக்கவிட்டோம்.

கல்கத்தாவில் பறக்கவிட்டோம்,

கடல் கடந்த நாடுகளில்—

அந்தமானில்

மலேயாவில்

சிங்கப்பூரில்

கோலாலம்பூரில்

இலங்கையில்—ஆம், தமிழர்கள் எங்கெங்கு இநக்கிருர்களோ அங்கெல்லாம் நம் கழகக்கொடியை ஏற்றிப் பறக்கவிட்டோம்! பரவசப்பட்டோம்! பார்த்து மகிழ்ந்தோம்.

அண்ணா!

மாடமாளிகையில் மூவர்ணக் கொடி பறந்தால் எங்களின் மண் குடிசையில் இருவண்ணக்கொடியை ஏற்றிப் பறககவிட்டு வணக்கம் செய்வோம்.

பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அழகான கார்களில் மூவர்ணக் கொடி பறப்பதைப் பார்ப்போம் அதே நேரத்தில் எங்களின் ஓட்டை சைக்கிளில் இருவண்ணக் கொடியைக் கட்டிப் பறக்கவிட்டு வாழ்த்து கூறுவோம்!

ஆறடுக்கு ஓட்டலிலே மூவர்ணக் கொடி பறக்கும். அதற்கு பக்கத்தில் அல்லது பத்தடி தள்ளியோ 'அண்ணா தேநீர் விடுதி' ஒன்று அமைத்து அதில் எங்களின் இருவண்ணக் கொடியை ஏர்றிப் பறக்கவிட்டு ஆனந்தப்படுவோம்!

வானத்தை எட்டக் கூடிய உயர்ந்த இரும்புக் கம்பத்தில் மூவர்ணக் கொடி பறக்கும், அதை விட மேலான உயரத்தில் நம் கொடியைப் பறக்க விடவேண்டும் என்ற ஆசை எங்களை வட்டமிடும். பணத்திற்கு எங்கே போவோம்? அதற்காக ஓய்ந்துவிட மாட்டோம். ஓங்கி உயர்ந்துவளர்ந்துள்ள புளியமரத்தின் உச்சாணிக் கொம்பில் எங்களின் இருவண்ணக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டோம் —கால் இடறி கீழே விழுந்து எங்களின் இன்னுயிரையும் தந்தோம்.

அண்ணா

பொது இடத்தில் கழகக் கொடியை ஏற்றுவோம்!

பொல்லாத காங்கிரசார் கொடியை இறக்குவர்.

மீண்டும் ஏற்றுவோம் மின்னல் வேகத்தில்,

வேண்டுமென்றே அங்கு மூண்டு விடும் போர்.

கொடியை ஏற்றியக் கரங்களைத் தாக்குவர்!

கொடியைத் தாங்கிய கம்பங்களைத் துணுக்குவர்!

போலீஸ் வரும்—

தடியடி நடக்கும்!

கண்ணீர்ப்புகை கக்கும்!

துப்பாக்கிகள் மிரட்டும்!—அயர்ந்து விடமாட்டோம்!

மீண்டும் ஏற்றுவோம்!

சிறைக்கதவுகள் திறக்கப்படும்! 'அண்ணா வாழ்க!' என்ற இதய மந்திரத்தை ஒலித்தபடி உள்ளே செல்வோம்.

சிறைக் கதவுகள் மீண்டும் திறக்கப்படும்! "அண்ணா வாழ்க" என்ற படிசிறையைவிட்டு வெளியே வருவோம்!

அண்ணா!

இந்தி எதிர்ப்பு போர் என்றீர்கள்

இந்தி எழுத்து அழிப்புப் போர் என்றீர்கள்!

இராஜாஜிக்குக் கருப்புக் கொடி—

நேருவுக்குக் கருப்புக் கொடி!

மும்முனைப் போராட்டம்!

கல்லக்குடிப் போராட்டம்!

விலைவாசிப் போராட்டம்!

சட்ட எரிப்புப் போராட்டம்!—என்று தாங்கள் போர்க் குரல் கொடுத்த பொழுதெல்லாம் எங்கள் இருவண்ணக் கொடியை ஊரெல்லாம் ஏற்றிப் பறக்கவிட்டு பார்த்து மகிழ்ந்து களம் நோக்கி நடந்தோம்—வெற்றி பல குவித்தோம்!

அண்ணா!

நம் கழகத் தோழர் ஒருவர் பஞ்சாயத்து உறுப்பினர் ஆகிவிட்டார் என்று தாங்கள் கூறியதுதான் தாமதம்; இருவண்ணக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டோம்!

அங்கொன்றும் இங்கொன்றுமாக நம் தோழர்கள் நகரசபை உறுப்பினர்கள் என்றீர்கள்! தெருவெல்லாம் நம் கொடியை ஏற்றிப் பறக்க விட்டோம்!

சில பஞ்சாயத்துக்கள் நம் பக்கம்

சில நகராட்சிகள் நம் பக்கம் என்றீர்கள்!—கோலாகலமாகக் கொடிகளை ஏற்றிப் பறக்கவிட்டோம்.

சென்னை மாநகராட்சி மன்றம் நம் கையில் என்றீர்கள்—மேயரை விட்டே சென்னை நகரமெங்கும் கொடிகளை ஏற்றிப்பறக்கவிட்டோம்.

பல பஞ்சாயத்துகள் நம் பக்கம்!

பல நகராட்சிகள் நம் பக்கம்! என்றீர்கள், உற்சாகத்தோடு நம் இதயக் கொடியை ஏற்றிப் பறக்க விட்டோம்!

பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்கள் — இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பக்கம் என்றீர்கள்!—ஏற்றிப் பறக்கவிட்டோம் இருவண்ணக் கொடியை!

ஐம்பது சட்டமன்ற உறுப்பினர்கள்!

ஐந்தாறு மேல்சபை உறுப்பினர்கள்!

ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள்!

நான் ராஜ்யசபா உறுப்பினன்!—என்றீர்கள்!

இனி எங்கள் அண்ணனின் குரல் டெல்லி பாராளுமன்றத்தில்—எதிரிகளின் காதுக்கு நேரில் என்ற மிடுக்கோடு ஏற்றிப் பறக்கவிட்டோம்!

நூற்றுமுப்பத்தேழு சட்டமன்ற உறுப்பினர்கள்!

இருபத்தைந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்!—அரசு நம்பக்கம்! அழிந்தது அக்ரம ஆட்சி!

மலர்ந்தது மக்களின் ஆட்சி!—என்றீர்கள்! 'நம் அண்ணன் தமிழகத்தில் முதலமைச்சர்' என்ற வெற்றிக் களிப்பில் இருவண்ணக் கொடியை ஏற்றி ஏற்றிப் பறக்க விட்டோம்!

அண்ணா!

ஏற்றுங்கள் கொடியைஎன்றீர்கள்.

ஏற்றிப்பறக்கவிட்டோம் இருவண்ணக் கொடியை!

மேலும் ஏற்றுங்கள் என்றீர்கள்!

மேலும் மேலும் பறக்கவிட்டோம்.

நீங்கள் காட்டிய திக்கெல்லாம் ஏற்றிப் பறக்க விட்டோம்!

உங்கள் கண் பட்ட இடமெல்லாம் ஏற்றிப்பறக்க விட்டோம்!

நீங்கள் நின்ற இடத்தில்-உங்கள் நிழல் பட்ட இடத்தில் எங்களின் இலட்சியக் கொடியை ஏற்றிப்பறக்க விட்டோம்.

ஐயகோ......அண்ணா......

எந்தக் கொடியை தாங்கள் கட்டளை இட்டபோது ஏற்றியேற்றிப் பறக்க விட்டோமோ......

எந்தக் கொடியை தங்களின் சுட்டு விரல் அசைந்த பக்கமெல்லாம் ஏற்றிப் பறக்க விட்டோமோ

அதேக் கொடியை......

எங்களின் இருவண்ணக் கொடியை......

எங்களின் இலட்சியக் கொடியை.........

எங்களின் இதயக் கொடியை...

அண்ணாவே!

அரிமாவே!

அன்புருவே!

அழகு மணியே!

அன்னையின் பரிவே!

ஆனந்த ஜோதியே!

ஆதிக்க வைரியே!

ஆட்கொண்ட தெய்வமே!

1969 பிப்ரவரி 3ம் நாள் நள்ளிரவில்—

உயரப் பறந்தக் கொடியை கீழே இறக்கிப் பறக்க விட்டோம்!

உயர உயரப் பறக்க விட்டக்கரத்தால்—

ஓடோடிப் பறக்க விட்ட கரத்தால் கீழே இறக்கிப் பறக்கவிட்டோம்!

ஆம் அண்ணா!

வங்கக் கடலோரம் தாங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டதினால் எங்கள் இன்பக் கொடியை இறக்கிப் பறக்க விட்டோம்.


ஐயையோ......

அரைக் கம்பத்தில் கொடி!

எங்கள் அடி வயிற்றில் இடி!

தாங்க முடியவில்லை அண்ணா!

தாங்க முடியவில்லை!





# அடிக்கோடு உணர்த்துகிறது!

அன்புள்ள அண்ணா!

1967-ம் ஆண்டு நிகழ்ந்த அமைதியான அரசியல் மாற்றத்துக்குப் பிறகு, 1968-ல் தாங்களே கூறியதுபோல, தாங்கள் சூழ்நிலையின் கைதியாக, ஆட்சிச் சிறையில் முதலமைச்சராக்கிவைத்துப் பூட்டிவிடப் பட்ட பின்பு—

கடந்த முப்பத்தைந்து ஆண்டுக் காலத்துக்கு மேலாக,

விழுச்சியுற்ற தேகத்தில் எழுச்சி வேண்டும்

விசைபொடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்

என்ற காரணத்துக்காக எழுதி எழுதிக் குவித்து—திராவிட நாடு என்ற பெயரிலும், 'காஞ்சி' என்ற பெயரிலும் எழுத்துப் புரட்சியினை நடாத்தி. தம்பி! என்ற அன்புரையால் அனைவருக்கும் மடல் எழுதி. இதயங்களையெல்லாம் நீவிவிட்டுக்கொண்டிருந்துவிட்டு, முதலமைச்சராகிவிட்ட பின்னர்,

தாங்கள் தம்பியர் படைக்குத் தந்து வந்த கருத்தோட்டங்களை—மடல் முறையை எனக்குத் தந்து என்னைப் பெருமைப்படுத்தினீர்கள். "திராவிட நாடு" இதழில் எனக்கு முன்னோடியாக இருந்த எவருக்குமே கிடைக்காத நல்வாய்ப்பினை நல்கினீர்கள்!

சிலவேளைகளில், என் எழுத்துக்கள் தடம்புரண்டு விட்ட நேரங்களில் நான் எப்படி என் எழுத்துகளைப் படைத்திருக்கவேண்டும் என்று கருத்துக்களைக் கூறி தவறுகளுக்கான சமாதானத்தைஎப்படிச்சால்புப்படுத்த வேண்டும் என்றெல்லாம் எடுத்துக்காட்டி சரியான பாதையிலே நடைபயில வைத்திருக்கிறீர்கள்.

தாங்களிட்ட பிச்சையால் நண்பர்க்கு எழுதி வந்த மடல் முறையினை. தங்கள் பெரிய இதயம் என்னை மன்னிக்கும் என்ற பெரு நம்பிக்கையுடன், அண்ணா, இன்று தங்களுக்கே எழுதத் தொடங்குகிறேன்! இந்தக் கிழமை மட்டும்! இதயக் குமுறல்களை, எழுச்சிப் பெருக்குகளை எங்கள் அண்ணனே! உங்களிடமல்லாது வேறு எவரிடம் கொட்டிக்காட்ட முடியும்?

நீங்கள் காலம் ஆகிவிட்டீர்களாம்! காலத்தோடு கலந்துவிட்டீர்களாம்! கண்ணீர்ப் பெருக்குக்கிடையே இந்த நாடு முழுவதும் இப்படித்தான் கூறிக்கொண்டிருக்கிறது.

ஊரெல்லாம் கூடி தேரிழுக்கும்போது உதவாக்கரையாக நான் மட்டும் ஒதுங்கி இருக்க முடியுமா?

அண்ணா! அந்தப் புத்தகத்தை என்றோ ஓர் நாள் படித்து, தங்கள் இதயத்தைத் தொட்ட ஒரு இடத்தில், சில வாக்கியங்களின் கீழ் அடிக்கோடிட்டு வைத்திருக்கிறீர்கள்.

அடிக்கோடிடப் பெற்ற அந்த சொற்றொடர், தங்கள் இதயத்தை எப்படியெல்லாம் உலுக்கி எடுத்திருக்கும் என்பதை இப்போது என்னால்—அல்ல அண்ணா, இந்த தமிழ் நாட்டில் தமிழராகவே வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லாராலுமே புரிந்துகொள்ள முடிகிறது.

"செல்வமும் அதிகாரமும் அறிவும்
ஒரு சிலருக்கே உரித்தாயிருந்ததை
எதிர்த்து நீங்கள் போர் தொடுத்தீர்கள்;
செல்வமும் அதிகாரமும் அறிவும்
எல்லோருக்கும் உரித்தாகும் பொருட்டு
நீங்கள் புகழ் மிக்க வீரமரணம் எய்தி
னீர்கள்"

உங்களால் அடிக்கோடிடப்பட்ட பதிகுகள்தான் அண்ணா இவைகள்! உங்கள் உதிரம் சூடேற்றப் பெற்றிருக்கும் என்பதை எங்களால் இப்போது உணர முடிகிறதே! உணர்ந்து ஓ! வென்று அலற முடிகிறதே!

1917ம் ஆண்டு நடைபெற்ற ருஷ்யப் புரட்சியின் போது. எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போரிடப் புறப்பட்ட புரட்சி வீரர்கள், எதிரிகளின் பயங்கரத் தாக்குதல்களுக்கும். துப்பாக்கிக் குண்டுகளுக்கும் மெஷின்கன்களுக்கும் இன்னுயிரைப் பரிசளித்துவிட்டவர்களின் நினைவாக லெனின்கிராடு நகரத்தில், செவ்வாய்க்களத்தில் எழுப்பப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தின் அடியில் பொறிக்கப்பட்டுள்ள இந்த சொற்றொடர், அந்தப் புரட்சியை நடத்தியவர்களையும், அதன் வெற்றியையும் தங்கள் கண்முன்னே கொண்டு வந்து காட்டியிருக்கும்.

புரட்சி வீரர்களின் புகழ் மரணம், நீங்கள் அடிக்கோடிடும் அளவுக்கு உங்கள் இதயத்தை வருடி விட்டிருக்கிறதல்லவா! கண்ணீர் முத்துக்களைக் கொட்டிவிட்டிருக்குமல்லவா உங்கள் கண்கள்!

அண்ணா! அன்புள்ள நெஞ்சம் உங்களுடையது என்று அகிலமெல்லாம் கூறக்கேட்டு அகமகிழ்கிறேன்—அகமகிழ்கிறோம்! ஆனால், நீங்கள் எங்களைப் பழி வாங்கிவிட்டீர்கள் அண்ணா! பழிவாங்கும் பான்மை தங்களுக்கு எப்படியண்ணா வந்தது?

ருஷ்யப் புரட்சி வீரர்களது வீரமரணத்துக்காக

இன்று தாங்கள் கண்ணீர் உகுத்ததற்காக, இன்று எங்களையெல்லாம் கண்ணீர் உகுக்கச்செய்து பழி வாங்கிவிட்டீர்களா அண்ணா!

ருஷ்ய நாட்டு நினைவுச் சின்னத்தில் பொறிக்கப் பட்ட புகழ் உரைகளை இன்று நாங்கள் மீண்டும் மீண்டும் மீண்டும் படித்துப்பார்க்கிறோம். அண்ணா —

எதையும் தாங்கும் இதயம்
இங்கு உறங்குகிறது

என்ற சொற்றொடரையும் நினைவு கூர்கிறோம்! ஒரு கல்லறைச் சின்னத்தின்மீது கோடிட்டுக் காட்டிவிட்டு, நீங்களும்அதுபோன்ற ஒருசின்னத்தையே எங்களுக்குத் தந்திருக்கிறீர்களே! ஏனண்ணா, எங்கள் கண்ணீர் காலமெல்லாம் அருவியாகக் கொட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்று நினைத்துவிட்டீர்களா?

ஓராண்டுக் காலத்தை ஓட்டிவிட்டோம்! அண்ணா, நீங்கள் இல்லாமல், ஆதுரமான தங்கள் முகத்தோற்றத்தின் அருள் இல்லாமல் ஓராண்டுக் காலத்தை ஓட்டியிருக்கிறோம்! இந்த இடைக்காலத்தில்?...

எங்கள் முகங்களில் எல்லாம் கவலைக் கீறல்களை நிர்த்தாட்சண்யமாக நீங்கள் ஏற்படுத்திவிட்ட அந்த இடைக்காலத்தில்தான்!...

நூற்றாண்டுக்காலமாக, ஒரு நாட்டையே தங்கள் பரம்பரைப்பாத்தியமாகக் கருதிச் சுவைகண்டு வந்த ஜார் பரம்பரைகூட, ஓட ஓட விரட்டப்பட்டு, அதன் சுவடுகூட இல்லாமல் அழித்தொழிக்கப்பட்டபோது, அப்படிக்கூறவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள் அண்ணா இருபதாண்டுக் கால உரிமை இருப்பதாக! வெட்கங்கெட்ட உரிமைதான் அது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, அமெரிக்கப் புரட்சியால் அழிவுற்ற அறிவு ஜீவிகள்கூட, அந்த உரிமையைச் சொல்லி ஆர்ப்பரிக்கவில்லை.

பிரஞ்சுப் புரட்சியினால் பிழைப்புக் கெட்டுப் போனவர்கள்கூட இப்படிப் பிதற்றவில்லை. பேசுகிறார்கள் அண்ணா இருபதாண்டுக்காலமாக இருந்தோமே என்று!

இந்தக் காலக்கணக்கைப் பார்த்திருந்தால் இந்திய சுதந்திரமேகூட வந்திருக்குமா?

இந்த அற்பத்தனத்தை நீங்கள் அமைதியாக அழித்து ஒழித்துவிட்டு எளிமையானதொரு ஆட்சியை ஏற்படுத்தித் தந்தீர்கள்.

என்றாலும், இன்னமும் பேசுகிறார்கள் இருபதாண்டுகள் என்று. ஆண்டுக்கணக்காக ஒட்டிக்கொண்டிருப்பதனாலேயே ஆற்றலும் உரிமையும் வந்து விடுகிறது என்று நினைக்கிறார்களே. பேதைகள்! அந்த ஆற்றலும், உரிமையும் அழிவுத் திசையில் நாட்டைக் கொண்டு வந்துவிட்ட பின்னருங்கூட அவர்கள் அப்படிப்பேச வெட்கப்படவில்லை அண்ணா! எத்தனை ஆண்டுகளாக இங்கே இருந்தோம் தெரியுமா என்று அவர்கள் பேசக் கேட்கும்போது — சிரிப்பும் வருகிறது — இரக்கமும் ஏற்படுகிறது.

காலக்கணக்கைக் காட்டியே காரியம் சாதித்துக் கொள்ளக்கருதிய அந்தக் கபோதிகளின் கணக்குத் தீர்க்கப்பட்டுவிட்டதண்ணா இந்த இடைக்காலத்தில்! பிளவுண்டு போனார்கள்! பிழைப்புகெட்டும் போனார்கள். விரித்த வஞ்சக வலைக்குள் தானே விழுந்து வெளிவர முடியாமல் விழிக்கிறார்கள்!

காலம் அவர்கள் கணக்கைத் தீர்த்துவைத்து விட்டது. 1972க்குப் பின் பேரேட்டிலிருந்தே கிழித் தெறியப்பட்டுவிடப் போகிறார்கள்!

இந்த இடைக்காலத்தில் நிகழ்ந்த இன்னொன்றையும் தங்கட்குத் தெரிவித்துவிடவேண்டுமில்லையா!

1953ல் தாங்கள் கட்டளையிட்டீர்களே. சிதம்பரத்தில் பொதுமாநாட்டில் பேசும்போது, மானங்காக்கும் போருக்கு மறவர்கள் தேவை என்று! 5000க்கும் மேற்பட்டவர்களை சிறை தனக்குள் வைத்துப் பூட்டிக் கொண்டதே அண்ணா—கல்லக்குடி போராட்டம் ஏன் பதன் பேரால்!

அந்தக் களத் தலைவனுக்கு, அண்ணா நீங்கள்

---


6-ம் பக்கத் தொடர்ச்சி

அவனைத் தண்டித்தது முறை; அரசநீதி. அவள் என்ன குற்றம் செய்தாள்? அதை நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன். அவள் என் சேடி; தோழி. அந்தக் கொடியிடையாளின் கண்களிரண்டும் குளமாகிவிட்டன; பாவம்! அவளது அழுகுரலைக் கேட்கச் சகியாமலே நான் இங்கு வந்துவிட்டேன். அவள் மீது கரம் வைக்க எவர் துணிவர்? கண்டதும் பரிதாபம் கொள்வர். மக்கள் ஏதோ மருண்டு, ஆத்திரத்திலே பேசுகின்றனர்'' என்றாள்.

''மக்களின் ஆத்திரம், மணிமுடிகளைக்கூட அகற்றியிருக்கிறதே தேவி!'' என்று கங்கா கிளறினாள்.

''சதிபுரியும் கூட்டமல்லடி தமிழர்'' என்றாள் அம்மங்கை.

''நானறியேன் அம்மையே! எமது நாட்டிலே மக்களுக்கு அடங்கியே மன்னர்கள் வாழ்வர்'' என்றாள் கங்கா, சாதுபோல். ''உன் நாடு! அது எது? ஓ! உன் மூதாதையர், முதன் முதல் சஞ்சரித்த நாடு என்று பொருளா? எனக்குத் தெரியும் அந்நாட்டு அதி ஆச்சரியப் பழக்க வழக்கங்கள். ஏனடி கங்கா! அவரில்லாவிட்டால் என்ன; அவர் கால் ஜோடு ஆளட்டும் என்று கூறின மக்கள், அயோத்தி நாட்டினர்தானே?'' என்று கேட்டுவிட்டு, கை கொட்டி நகைத்தாள் அரசகுமாரி. கோபத்தை அடக்கிக்கொண்ட கங்காபாலா, ''அது தேவ கதையன்றோ?'' என்று விடை கூறினாள், ''உங்கள் தேவ கதை கிடக்கட்டும் நீ போய் தேம்பிக்கிடக்கும் நடனாவுக்குத் தேறுதல் கூறு, போ'' என்று கூறிக் கங்காவை அனுப்பி விட்டுக் கவலையுடன், மஞ்சத்திலே மன்னனின் மகள் படுத்துக் கிடந்தாள்.



இருந்து புகழாரம் சூட்டாமல் போய்விட்டீர்களே! அண்ணா, 1953-ஜூலையில். நான் பத்து வாரங்கள் இந்தப் போராட்டத்தின் பேரால் தண்டிக்கப்பட்டு திருச்சி சிறைக்கூடத்துக்குள்ளே தள்ளிவிடப் பட்ட போது அங்கே இருந்து வரவேற்றவர் யார் தெரியுமா அண்ணா? நீங்கள் நியமித்த கல்லக்குடி களத்தலைவர் தான் அண்ணா! கலைஞர்தான் அண்ணா!

நீங்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து தொய்யாத அளவுக்கு, தொல்லைகளையேற்று நல்லதே செய்து வருகிறாரே கலைஞர், இந்தக் கல்லக்குடி வெற்றியை அவர் உங்கள் திருப்பாதங்கள் மீது ஏற்றி கண்ணீர் விட்டபோது — ஆமண்ணா, ஆனந்தக் கண்ணீர் விட்டபோது, காண்பதற்கு இல்லாமற்போய் விட்டீர்களே! ஏன் அண்ணா! எங்கள் வாழ்வும், எங்கள் வளவும் நீங்கள் இன்மையால் மங்கி மடியட்டும் என்று எண்ணி விட்டீர்களா?

நீங்கள் மறைந்துபோய் விட்டீர்கள். சிலர் அதனை மறந்தும் போய்விட்டார்கள். இதனை எண்ணும்போது—

செல்வமும், அதிகாரமும், அறிவும் ஒரு சிலருக்கே உரித்தாயிருந்ததை எதிர்த்து நீங்கள் போர் தொடுத்தீர்கள்;

செல்வமும், அதிகாரமும், அறிவும் எல்லாருக்கும் உரித்தாகும் பொருட்டு நீங்கள் புகழ் மிக்க வீரமரணம் எய்தினீர்கள்

என்று அடிக்கோடிடப் பெற்ற அரும் வாக்கியங்களைத் தான் நான் நினைவு கூர்கிறேன். கூடவே, தாங்கள்—

எதையும் தாங்கும் இதயம்

படைத்தவர் என்பதும் நினைவுக்கு வந்து விடுகிறது அண்ணா!

செல்வமும், அதிகாரமும், அறிவும் நாட்டவர் அனைவருக்கும் பொதுவாயிருக்கும் பொருட்டு புகழ் மரணம் எய்தியதின் மூலம் ருஷ்ய நாட்டார் மகத்தான புரட்சி செய்தனர்.

அதே புரட்சியை, அதே காரணத்துக்காக நீங்களும் செய்தீர்கள்; அமைதியாக, மிகமிக அமைதியாக, ஒன்று நினைவுக்கு வருகிறது. நீங்கள் கோடிட்ட நூலின் இன்னோர் இடத்தில் காணப்படுவது இது.

புரட்சி வீரர்கள், ஜார் மன்னனின் பனிக்கால அரண்மனைக்குள் புகுந்து விடுகிறார்கள் நள்ளிரவில். ஜார் மன்னன் துரத்தப்பட்டு கெரன்ஸ்கியின் தற்காலிக ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமயம் அது.

புரட்சிக்கும்பல் அரண்மனைக்குள் அறை அறையாக நுழைந்து அங்குள்ள அரும் பொருட்கள் அனைத்தையும் எடுத்து வெளியே போடுகிறது.

ஒரு வயதான குடியானவன் குளிர் தாங்க முடியாத காரணத்தால் விலையுயர்ந்த ஒரு கம்பளிப் போர்வையை எடுத்துத் தன்னைப் போர்த்துக்கொள்கிறான். இதைக் கண்ட இன்னொரு தொழிலாளி கோபமடைகிறான் 'அதனை எடுக்கக்கூடாது' என்று கூறி கம்பளியை இழுக்கிறான்.

குடியானவனுக்குக் கோபம் வந்துவிடுகிறது. கடுஞ் சினத்தோடு—

"கம்பளியைவிடு; அது என்னுடையது" என்கிறான்.

"இல்லை, இல்லை, இது உன்னுடையதல்ல! இது எல்லா மக்களுக்கும் சொந்தமானது; அரசாங்கத்துக்குச் சொந்தமானது. யாரும் உரிமை கொண்டாடக்கூடாது! இவை இன்றிரவு இந்த இடத்தைவிட்டு வெளியே போகக்கூடாது"

என்று கர்ஜிக்கிறான் தொழிலாளி.

"என்ன ஆனாலும் சரி; இந்தக் கம்பளி இப்போது வெளியே போகத்தான் போகிறது; ஒரே குளிராக இருக்கிறது இந்த இரவு"

"நீ குளிரில் துன்பப்படுவதற்காக நான் மனதார வருந்துகிறேன்; ஆனால் இதனை நீ எடுத்துக்கொண்டால் உன்னைப் புரட்சிக்காரன் என்று கூற முடியாது! நீ கொள்ளைக்காரன் ஆகிவிடுவாய்! உன் கொள்ளையால் புரட்சிஅவமதிக்கப்பட்டுப்போகும். இதைவிட் நீ குளிரால் வருந்துவதுதான் நல்லது"

"உன்னை சைத்தான் கொண்டுபோக! நாம் எல்லோரும் எதற்காகப் புரட்சி செய்தோம்? உணவும், உடையும் எல்லோருக்கும் என்றுதானே புரட்சி செய்யச் சொன்னீர்கள்"

"ஆமாம் தோழரே! உனக்கும், எல்லோருக்கும் தேவையானதை எல்லாம் இந்தப் புரட்சி, உரிய காலத்தில் நிச்சயம் கொடுக்கும். ஆனால் இந்த இரவில் அல்ல; இந்த கம்பளியின் வடிவத்தில் அல்ல. இங்கிருந்து ஏதேனும் வெளியே போனால், நாம் எல்லோருமே கயவர்கள், கொள்ளைக்காரர்கள் என்று அழைக்கப்பட்டுவிடுவோம். நாம் சோஷலிஸ்டுகள்; கொள்ளைக்காரர்கள் அல்ல. நாம் புரட்சி செய்தது கொள்ளையிடத்தான் என்று எதிரிகள் ஏளனம் செய்வார்கள்! நாம் எதையும் எடுத்துப்போகக் கூடாது. புரட்சியை மதித்து, நாம் இவற்றை கௌரவிக்க வேண்டும்,"

குடியானவன் ஆத்திரத்தோடு அந்தக் கம்பளியை எடுத்து எறிந்துவிட்டுப் போகிறான். ஆத்திரத்தோடு எறிந்தாலும். தொழிலாளி கூறிய உண்மை அவன் மனதை எட்டத்தான் செய்கிறது. செய்யப்பட்ட புரட்சி தனி ஒருவனுக்காக அல்ல; மக்கள் அனைவருக்குமாகத்தான் என்பதும் புரிகிறது. கிடைத்தவரையில் லாபம் என்று கொள்ளையடிக்க நினைத்ததை எண்ணி வருந்துகிறான்.

அண்ணா. அதே குடியானவன், அதே இரவில், அவனைப் போலவே ஒருவன் ஒரு பொருளை எடுத்து பைக்குள் திணிப்பதைத் தடுத்து — 'அது மக்கள் உடைமை' என்று சொல்கிறான்!

இந்தப் புரட்சியின்போது இது ஒரு சாதாரண விஷயம்தான்! ஆனால் அண்ணா அதில் அடங்கியுள்ள தத்துவம்? எத்தனைப் பெரியது என்று எண்ணி மகிழ்ந்து. உடனே நம்மவரை எண்ணி உள்ளுக்குள் புழுங்குவதைத் தவிர எதுவும் செய்ய முடியவில்லையே!

இந்த நாட்டில் ஆயுதம் எடுத்துப்புரட்சி நடத்தும்படி தாங்கள் கூறியதில்லை; அந்த வகையில் தங்கள் சிந்தனை சென்றதுமில்லை. அறிவையும், அறிவுடையவர்களையும் நம்பினீர்கள்.

'திராவிட நாடு' ஏடும். "காஞ்சி"யும் தங்களுக்கு அந்த வகையில் எவ்வளவோ பயன் பட்டிருக்கின்றன!

எத்தனையோ நூற்றுக் கணக்கான ஏடுகளுக்கிடையே தாங்கள் "திராவிட நாடு" "காஞ்சி" இவை

கள் மட்டுமே இதுபோன்ற புரட்சிக்கு நாட்டையும், நாட்டவரையும் தயார்செய்தது என்பதனை எண்ணிப் பார்க்காமல் எவராலும் இருக்கமுடியாது.

அண்ணா, கார்ல்மார்க்ஸ். தான் இதழ் நடத்தித் தோல்வியுற்ற ஒரு சந்தர்ப்பத்தில் சொல்கிறான்:

> "வியாபார நிலைக்கு இறங்கி விடுகிற ஒரு பத்திரிகை சுதந்திரமாயிருக்க முடியுமா? ஓர் ஆசிரியன் பணம் சம்பாதிக்க வேண்டியது தான். எதற்காக? உயிர் வாழ்வதற்காகவும், மேலும், மேலும் எழுதிக்கொண்டிருப்பதற்காகவும். அவன் பணம் சம்பாதிப்பதற்காக எழுதக் கூடாது; பணத்துக்காகவே அவன் உயிர் வாழ்தலும் கூடாது. எந்த ஒரு ஆசிரியன் தன் செல்வ நிலையை உயர்த்திக் கொள்வதற்காக, ஒரு கருவியாக தன் பத்திரிகையைப் பயன் படுத்திக்கொள்கிறானோ அவன் தண்டனைக்குரியவன். ஏனென்றால், அவன் அறிவை விலைகூறுகிறான் என்பது பொருள்"

உலகப்பொருளாதாரத்துக்கே மூலதனம் வகுத்துத் தந்தவன் கூறுகிற இலக்கணம் இது. இந்த இலக்கணத்தோடல்லவா அண்ணா தங்கள் அன்றைய 'திராவிட நாடும்' இன்றைய 'காஞ்சியும்' நடந்தது; நடக்கிறது!

ஏடு, வியாபாரப் பொருளாக இருக்கக்கூடாது; இலட்சியப் பொருளாக, இருக்கவேண்டும்! வெறும் இலட்சியங்களை மட்டுமேதான் ஏந்தி வந்தன தங்கள் திராவிட நாடு! வந்து கொண்டிருக்கிறது 'காஞ்சி'

அமைதிப் புரட்சியை நடாத்தித் தந்த ஏடுகள்! அறிவுடைமையையும். ஆக்கப் பணிகளையும் ஒரு சேரத் தந்து வந்தவை இவை.

அண்ணா! ஒரு கிழமை, தங்கள் எழுத்து இல்லையென்றால் படிக்கவே சுவைப்பதில்லை—என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அன்றும் இன்றும்!

தங்கள் எழுத்து இல்லாது 'காஞ்சி' இருக்கக் கூடாது என்றுதான் என் ஆசிரியரும், தங்கள் குமாரருமாகிய இளங்கோவன் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அதற்காகவேதான் அண்ணா. தம்பிக்கு மடலைத் தொடங்கியது "காஞ்சி!"

இப்போது 'கலிங்கராணி'யைத் தந்து கொண்டிருக்கிறது "காஞ்சி"

பொங்கல் மலரில்கூட, தங்கள் "இன்ப ஒளி"யின் முழு வடிவத்தையும் தந்திருக்கிறது "காஞ்சி"

இனியும் தங்கள் புதுக் கருத்துக்களையெல்லாம் தொகுத்துக் கொடுக்க இருக்கிறது "காஞ்சி"

என்றாலும் அண்ணா, தங்களிடம் இதனைச் சொல்வதிலே, யாருக்கும் மனவருத்தம் ஏற்படாது என்பதற்காகவே சொல்கிறேன். உங்கள் எழுத்தினைப் படித்துப்பார்த்து, பக்குவமடையக் காத்திருந்த, குறிப்பிட்ட நாளில் வந்தாலும், தாமதித்து வந்தாலும் நூறு நடை, நடந்து வந்துவிட்டதா? வந்துவிட்டதா? என்று கூட்டமாகக்கூடி, பெற்றுச் சென்றார்களே, அந்த நிலையை மீண்டும், கழகத் தோழர்கள் உண்டாக்கிக் காட்டாவிட்டாலும், 'காஞ்சி' கழக ஏடு, கழகக் காவலரின் ஏடு; அண்ணா, தங்கள் குடும்ப ஏடு என்பதனை நினைவில் கொண்டு செயல் பட்டாலே போதும்.

கார்ல் மார்க்ஸ் குறிப்பிட்டதுபோல, இலட்சியத்துக்காக நடத்தப்படும் ஏடாக என்றும் இருக்கும். இல்லையா அண்ணா!

ஏடுகள் வியாபார நோக்கத்தோடு நடத்தப்படும் போது, அதற்கேற்படும் வாய்ப்பு வசதிகள் பற்றி 1966ம் ஆண்டு "காஞ்சி ஆண்டு மலரில்" மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அந்த வாய்ப்பு வசதிகள், அண்ணா, உழவனை இழந்துவிட்ட குடும்பத்துக்கு உண்டாக்கிக்கொள்ள முடியுமா? என்பது தங்களுக்குத் தெரியாதா அண்ணா!

முடியும் என்கிறீர்கள். புரிகிறது. தோழர்கள் முனைந்தால் முடியும் என்பதுதான் அதன் பொருள் என்பதும் புரிகிறது. தோழர்கள் ஒவ்வொருவரும் தவறாமல் ஆண்டுச் சந்தாதாரர்களாக சேர்ந்து கொண்டும், சேர்த்துக்கொண்டும் வந்தாலேபோதும் என்று உங்கள் மூலம், அண்ணா தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'காஞ்சி' என்றென்றும் இலட்சிய ஏடாகவே இலங்கவேண்டும் என்று ஆசிரியரே எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். எனக்களித்த தங்கள் அருளை, அதற்குப் பயன் படுத்திக்கொள்வதற்குத்தான் அண்ணா, இதனை எடுத்துக்காட்டுகிறேன்.

> இலட்சிய ஏடாக இலங்குவது "காஞ்சி"யின் பொறுப்பு
>
> "காஞ்சி"யை என்றும் இலட்சிய ஏடாகக் கொண்டிருப்பது தோழர்கள் பொறுப்பு

என்பதை நீங்கள்தான் அண்ணா எடுத்துச்சொல்ல வேண்டும்!

இந்தக்கிழமை, கடற்கரையில் குழுமி இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் நமது முதலமைச்சர் தலைமையில் உங்களுக்கு அஞ்சலி செலுத்தி இருக்கிறார்கள், அப்போது நமது மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக்கொண்டிருக்கிறார்:

> அண்ணா அவர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து, துவளாமல் நிறைவேற்றுவதென்பது, அண்ணா அவர்களின் அடியொற்றி நடப்பதுதான்! அவர்களது ஏடுகளை எழுத்துக்களைப் படித்துப் படித்துப் பயன் பெறுவதுதான்!

என்று எடுத்துக்காட்டி இருப்பதன் பொருளை, அண்ணா, நான் கொஞ்சம் "காஞ்சி"க்கு சாதகமாக்கிக்கொள்ள முயல்கிறேன்.

முயற்சிக்கு வெற்றி கிடைக்க உங்கள் நல்லாசி என்றென்றும் எனக்குக் கிடைக்குமென்று நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால், அண்ணா—

> செல்வமும், அதிகாரமும் அறிவும் ஒரு சிலருக்கே உரித்தாயிருந்ததை எதிர்த்து நீங்கள் போர் தொடுத்தீர்கள்;
>
> செல்வமும், அதிகாரமும், அறிவும் எல்லோருக்கும் உரித்தாகும் பொருட்டு நீங்கள் புகழ் மிக்க வீரமரணம் எய்தினீர்கள்.

என்ற சொற்றொடரின் கீழ் நீங்கள் அடிக்கோடிட்டுக் காட்டி, எதனை உணர்த்தியிருக்கிறீர்கள் என்று எங்களுக்குப் புரிகிறது.

அன்புள்ள,

திருவாரூர் முத்துமணி

## புழுவாய்ப் பிறக்கவேண்டும்!

எங்கெங்கு திரிந்திடுவேன்
என்(று) அண்ணன் முகம்பார்ப்பேன்
எவ்விடத்தில் தேடிடுவேன்
என் அண்ணன் உடல்பார்ப்பேன்
பாலையாய்ப் பிறந்திருந்தால்
தாலாட்டுப் பாடிடுவேன்
காற்றாக உதித்திருந்தால்
கட்டுடலை வருடிடுவேன்
சிலையாகச் சமைத்திருந்தால்
செந்தமிழைப் பார்த்திருப்பேன்
பேழையாய் அமைந்திருந்தால்
பேரறிவைச் சுமந்திருப்பேன்
கல்லாக ஜனித்திருந்தால்
கல்லறையாய் எழுந்திருப்பேன்
புல்லாக முளைத்திருந்தால்
புகழாளர் அருகிருப்பேன்
மண்ணாக பிறந்திருந்தால்
மடியில்வைத் தாட்டிடுவேன்
மனிதனாகத் தோன்றிவிட்ட
மாபாவம் என்சொல்வேன்?
ஏழ்ப்பிறவி நிசமென்றால்
இன்றைக்கே சாகின்றேன்!
அடுத்துவரு பிறவிகளில்
ஆண்டவனே! என்னையொரு
புழுவாகப் படைப்பாயே!
புண்ணியவான் வாழுமிடம்
துளைப் போட்டுச் செலவேண்டும்
தூயமுகம் காணவேண்டும்.

—கீ. க. இராசேந்திரன்

## நண்பராற்றுப் படை

இலங்குநூ லளைய என்னரு நண்ப
உலகினி லுயர்ந்த தமிழ்க்குடி யதனில்
சிறந்திடு பெருமை யுற்றதை மறந்தே
அறநெறிப் பிறழ்ந்தே அன்பினை வெறுத்தே
அணங்கவள் மனமே மாறினள்; எனவே
மன்றலில் அறிந்ததும் மறுகினன் நெஞ்சம்.
என்னுடை நினைவும் ஏகிற்றுப் பின்னே
நின்னுடை யுள்ளத்தை நேரிய முறைதனில்
துன்னிய முதலோன் பயனுரைக் கேண்மின்
''பெற்ற பெருவளம் பெறுநர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்னவப்'' புலவோர்
எந்தன் முன்னரே தோன்றிய காட்சியில்
சிந்தையிற் பட்டதே; சீரிய வுணர்வே
வங்கக் கடலதின் வளைக்கரம் தழீஇய.
மங்காத் தமிழரின் புகழெனப் பரந்த
மணற்வெளிப் பரப்பினை யணுகி யாங்கே
மணமதைப் பரப்பி மாண்புட னிலங்கும்
அண்ணன் வரினடைக் கலமி ரங்குமின்
எண்ணரும் புகழினன் எளியோர் மன்னவன்
கண்ணெனத் தமிழைக் காத்திடு முணர்வை
மண்ணிலே மறுபடி புதுக்கியப் புரவலன்
எதனையும் தாங்கிடு இதயத்து ரிமையான்
என்றிடு புகழொடு உறங்கிடு மவனைக்
கண்டிடு கணமதில் கவலை நீங்கிட
திண்ணிய உளமே பெற்றேர் பல்லோர்
ஆங்குநீ செலினே என்றும்
நீங்காவ மைதிநின் னுடைமை யாகும்மே!

—கோ. சண்முகானந்தம்

## நந்தமிழ் நாயகன்!

காதலின் வாட்டம் களைந்திடு கூட்டும்
கனிதமிழ் மொழியதின் களிதரும் சுவையும்
சாதலில் புரிந்திடு தவிப்பின் அன்பும்
தந்தவன் நந்தமிழ் நாயகன் அண்ணா!

செந்தமிழ்ச் சோலையில் சிரித்திடு மலர்களில்
சிந்தனை தூண்டிய தேன்றமிழ் மாமலர்!
அந்தமில் சொற்சுவை ஆற்றலால் யாரையும்
அண்டிட வைத்ததோர் அருளுடை அறிவொளி!

பாட்டிலும் ஏட்டிலும் பாமரர்ப் பேச்சிலும்
பாரினில் அவனது பண்பினைக் கூறிடக்
கூட்டினில் தங்கிடும் புலம்படா உயிரினால்
கூடுமோ? கொள்ளுதும் கூறுதல் புகழிலை!

வெண்ணிலா அருகினில் எண்ணிலாத் தாரகை
கண்ணிலே காண்பினும் தண்ணொளிக்(கு)
இணையுமோ?
மண்ணிலே வாழ்பவர் எண்ணமாய் நிற்பவன்
வையகத் தமிழரின் மன்னவன் அண்ணனே!

அன்னவன் அண்ணனுக்(கு) அஞ்சலில் ஓர் உரு
அமைத்திடும் இந்நாள் அவனியில் பொன்னாள்!
சின்னவர் பெரியவர் சிறப்புடை யோர்க்கெலாம்
செந்தமிழ்த் தாயுவள் தந்திடும் சீர்மைநாள்!

—கு. பிரான்சிஸ்

## வழிகாட்டி

மேடையெங்கும் நமதண்ணா மக்கள் கேட்டு
வியப்படையும் முறையினிலே சொல்பொழிந்தார்
கூடவந்தோர் அவர்வழியைப் பற்றச் செய்து
கொள்வதற்கும் வழிகாட்டி மகிழ்ச்சி யுற்றார்
நாடகத்தை உருவாக்கி அறிஞர் அண்ணா
நடிப்பதைக் கண்ணுற்ற படியி னாலே
பாடகரும் படித்தவரும் நடிக்க லானார்
பண்பட்ட 'வழிகாட்டி' அண்ணா வன்றோ?

நம்மவர்கள் ஏடுகளை நடத்தக் கண்டால்
நசுக்குவோர் சூழ்ச்சிகள் தூள்தூ ளாகத்
தம்முடைய எழுத்தாற்றல் 'காட்டி' நின்றார்
தம்பியர்க்கும் 'வழிகாட்டி' எழுதச் செய்தார்
'எம்மைப்போல் கதைஎழுத எவருமில்லை'
என்றுகதை விடுவாரும் நாணும் வண்ணம்
செம்மொழியில் கதைப்புரட்சி செய்தா ரண்ணா
செந்தமிழர் அவர்வழியே சிறந்த தென்றார்!

சொல்லாமல் விளங்கவைக்கும் ஓவியத்தைத்
தொடர்ந்துநம் பேரறிஞர் வரையக் கண்டே
பல்விதமாய் ஓவியத்தை வரைய வந்தோர்
பாங்குள்ள கலையென்று புகழ லானார்
நல்லாட்சி நடத்துவதும் எவ்வா றென்றே
நாட்டமுள்ள தம்பியர்க்கும் காட்டிவிட்டு
எல்லோரும் இருக்கையிலே அறிஞர் அண்ணா
என்றென்றும் ஓய்வுள்ள உலகம் சென்றார்!

—புலவர். மு. சிக்கந்தர்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

தையும், அதன் விளைவையும் அரசியல் பின்னணியில் அறிந்துகொள்ள வேண்டுவதும், தலையாய கடமையாகும்.

## உண்மையான இழப்பு!

"ஒரு தொழிலாளி, ஒரு நாளைக்குப் பனிரெண்டு மணி நேரம் வேலை செய்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் உழைப்புக்கு என்ன மதிப்போ, (அதாவது எவ்வளவு கூலியோ.) அதனை ஆறு மணி நேரத்திலேயே உற்பத்தி செய்து விடுகிறான். (அதாவது 12 மணி நேரம் அவன் உழைத்தால் அவனுக்கு என்ன கூலி கிடைக்கிறதோ அந்தத் தொகைக்கு ஈடான பொருளை, அவன் 6 மணி நேர உழைப்பிலேயே உற்பத்தி செய்துவிடுகிறான்.) மிகுதியுள்ள 6 மணி நேரத்தில் அவன் உழைத்து உற்பத்தி செய்த பொருள் இருக்கிறதே, அதுதான் முதலாளியின் சுரண்டல் பொருள். அவனுடைய மிஞ்சிய மதிப்பு, உழைத்துப் பொருளைத் தயாரிக்கிறானே, அந்தப் பொருளுக்கு முதலாளி அதிகமான கூலி கொடுக்கவில்லை. ஆனாலும், அந்தப் பொருளுக்கு விலை வைக்கிறபோது, உழைப்பு நேரத்தின் விதாச்சாரப்படியே விலை வைக்கிறான."

—என்று ஒரு கணக்குப் போட்டுக்காட்டி தொழிலாளி, முதலாளி இவர்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டினையும் கூலி, சுரண்டல் பற்றிய மதிப்பு அளவினையும் விளக்கி இருப்பவர்தான் பெர்ட்ரண்ட் ரசல். இந்தக் கிழமை நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நாம் வாழும் காலத்தில் தலைசிறந்தவொரு சிந்தனையாளராகவும் தத்துவ மேதையாகவும், இலக்கிய கர்த்தராகவும் விளங்கி வந்த ரசலின் மறைவு, அகிலம் முழுவதனுடைய தெளிந்த சிந்தனைத் தன்மைக்கே ஒரு இழப்பு என்று வருணித்தால்கூட அது தவறாகாது.

"சுரண்டல்" என்ற சொல்லுக்கு மட்டுமே தரப்பட்டிருக்கின்ற இந்த சிறு விளக்கத்தைக் கொண்டே, அவரது விரிந்தகன்ற மேதைமையைக்கணிக்க முடியும். ஒருசமயம் விஞ்ஞானிகள் மாநாடொன்றில், விஞ்ஞானிகள் முன்னிலையில் விஞ்ஞான சக்தியின் துல்லியமான கூறுகள் பற்றி வானளாவப் புகழ்ந்துவிட்டு, விஞ்ஞானத்தின் வலிவால், மரம் ஒன்றை அழித்துக் 'கரி'யாக்கி விட முடியும்; ஆனால் அந்த விஞ்ஞானத்தின் வலிவாலேயே, அந்த 'கரி'த்துண்டுகளை மீண்டும் உயிருள்ள மரமாக்க முடியுமா? என்று கேட்டாராம்! விஞ்ஞானத்தால் இயற்கையை வெல்ல முடியாது என்று விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டார்களாம்!

அந்த அளவுக்கு ஓங்கு புகழ் கொண்ட சிறந்த சிந்தனையாளரான ரசலின் இழப்பு உண்மையிலே ஈடு இணையற்றதுதான். ரசல், 40க்கு மேற்பட்ட நூல்கள் எழுதி இருக்கிறார். இலக்கியப் பணிக்காக இவர் மிக உயர்ந்த நோபல் பரிசினைக்கூடப் பெற்றிருக்கிறார்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களே இரங்கல் செய்தி விடுத்திருக்கிறார் என்றால் ரசலின் பெருமை சாதாரணமானது அல்லதான்! இழப்பு உண்மையிலேயே வருந்தத்தக்கதுதான்!




**3-2-70 அன்று தமிழக அமைச்சர்கள் அண்ணா சமாதிக்குச் சென்று மலர்வளையம் வைத்து வணங்கினர்.**

நன்றி: 'தினத்தந்தி'






ஆசிரியர், வெளியிடுபவர், சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-